தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
K.சந்திரசேகரன் தலைமை இடம் - சென்னை. R.சந்திரசேகரன்
தலைவர் பொதுச்செயலாளர்

## சுற்றறிக்கை எண் 14 / 2017 10.08.2017

அன்புடையீர்,

வணக்கம். நாம் 21.7.2017 கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி நிர்வாகம் மத்திய அலுவலக ATO–க்களின் கடமைகளும், பொறுப்புகளும் தமிழில் 2.8.2017-ல்வெளியிட்டுள்ளது. (இணைக்கப்பட்டுள்ளது.)

▪ சென்னையில் உள்ள தமிழ்நாடு மின்வாரிய ஓய்வூதியர்கள் சங்கத்தின் 21-ம் ஆண்டு துவக்க விழா மற்றும் பொது உறுப்பினர் கூட்டம் 5.8.2017 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராகப் பொதுச்செயலாளர் கலந்து கொண்டார்.

▪ தேர்வு நிலையும், பதவி உயர்வும் ஒரே நேரத்தில் வரும் போது, ஊழியர்கள் பல்வேறு காரணங்களை முன்னிட்டு உடனடியாக பணிவிடுப்பு செய்யப்படாததால், தேர்வு நிலையைப் பெற்றுக் கொண்டு பின்னர் உயர் பதவியில் சேருவது இயல்பாக நடைபெற்று வருகிற ஒன்றாகும். ஆனால் தேர்வுநிலை வழங்குவதே, 9 ஆண்டுக்குள் பதவி உயர்வு பெற வாய்ப்பில்லை என்பதற்காகத்தான். ஆனால் 9 ஆண்டுகள் முடிவடைவதற்குள், பதவி உயர்வு வழங்கியும் உடனே பணியில் சேராதவர்களுக்கு தேர்வு நிலை வழங்க முடியாது என்று நிர்வாக அலுவலர்களும், சில தணிக்கை அலுவலர்களும் வியாக்கியானம் செய்து ஊழியர்களுக்கு தேர்வு நிலைப்பலனை மறுத்துவருவதாக அறிய வருகிறோம். இது சரியல்ல என்பது நமது சங்கத்தின் கருத்தாகும். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் விண்ணப்பங்களை சேகரித்து மத்திய சங்கத்தின் மேல் நடவடிக்கைக்கு அனுப்பி வைத்திடுமாறு வேண்டுகிறோம்.

▪ அரசு ஊழியர்களின் 1.1.2016 முதல் ஊதிய உயர்வு சம்மந்தமாக மத்திய அரசு அமுல்படுத்திய 7-வது ஊதியக்குழு பரிந்துரையை, தமிழக அரசு அமுல்படுத்துவதற்கு நியமிக்கப்பட்ட குழு, தனது பரிந்துரையை, வழங்கிட 30.09.2017 வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு ஊழியர்களுக்கு புதிய ஊதிய விகிதங்கள் அமுல் படுத்திய பிறகு மின்வாரியத் தொழிலாளர்களுக்கு 1.12.2015-க்கான ஊதிய உயர்வு பற்றி பேசலாம் என்பது பெருவாரியான தொழிற்சங்கங்கள் எடுத்துள்ள நிலை. இதற்கிடையில் ஒரு சிலர் ஊதிய உயர்வை உடனடியாக அமுல்படுத்திட வேண்டும். தமிழக அரசு ஊழியர்களுக்கு வழங்கும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று திரும்பத்திரும்ப நெருக்கடி கொடுப்பதால், மத்திய அரசு ஊழியர்களுக்கு 10 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு 14.3% சதம் வழங்கியுள்ளதால், அதே விகிதாச்சாரத்தில் மின்வாரியத் தொழிலாளர்களுக்கு 4 ஆண்டு இடைவெளியைக் கணக்கிலெடுத்து 14.3 10 x 4 : 5.6 சதம் ஊதிய உயர்வு வழங்கலாமா? என்று நிர்வாகம் ஆலோசித்திருப்பதாகத் தெரியவருகிறது. இதனை ஒரு போதும் தொழிலாளர்கள் ஏற்க மாட்டார்கள். மேலும் ஓரிரு மாதங்கள் காத்திருந்து 1.12.96 மற்றும் 1.12.2007 ஊதிய உயர்வுகளைப் போல, மத்திய மாநில அரசு ஊழியர்களுக்கு இணையாக, 2.57 மடங்கு ஊதியமும், குறைந்தபட்சம் 14.3% ஊதிய உயர்வும் பெறுவதைத்தான் தொழிலாளர்களும், ஓய்வூதியர்களும் விரும்புவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

▪ மின்வாரியத்தின் 60-வது ஆண்டு வைரவிழாவினையொட்டி, மின்வாரியத் தொழிலாளர்களுக்கு சிறப்பு ஆண்டுயர்வும், ஓய்வூதியர்களுக்கு ரொக்கப்பரிசும் வழங்கிட வேண்டும் என்ற சங்கங்களின் கோரிக்கையை, நிர்வாகம் சாதகமாகப் பரிசீலனை செய்து வருவதாக அறிகிறோம். மின்வாரியத் தலைவர் அவர்கள் ‘காற்றாலை மின்சாரம்’ சம்மந்தமாக ‘கலிபோர்னியாவில்’ நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றுள்ளதாகவும் தாயகம் திரும்பியதும் 16.8.2016-க்குப் பிறகு முடிவு எடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

▪ 1987-க்குப்பிறகு மின்வாரியத்தில் பணியில் சேர்ந்த I.T.I. பயின்ற கள உதவியாளர்கள் துவக்கத்தில் பல சங்க உறுப்பினர்களாக இருந்தார்கள். திரு.மனோகரனுக்கு மின்வாரியத்தில் பணிநியமனம் கிடைத்த செய்தியையும், வாழ்த்துக்கடிதத்தினையும் முதலில் அனுப்பியது நமது சங்கம். பணியில் சேர்ந்தவுடன் அவர் உறுப்பினரானதும் நமது சங்கத்தில்தான். பின்னர் தங்களது தனித்தன்மையை வெளிப்படுத்தி I.T.I. தொழிலாளர்களுக்கென தனிச்சங்கத்தைத் தோற்றுவித்து, தங்களது ஒற்றுமையினால், கடின உழைப்பினால், பல்வேறு தெருமுனைப் போராட்டங்கள், சட்டப் போராட்டங்களை மேற்கொண்டு இன்று மின்சார வாரியத்தில் அசுர வளர்ச்சி பெற்ற சங்கமாக விளங்கி வருவதை நாம் அறிவோம். இத்தகைய பிரம்மாண்ட வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்ட தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கத்தின் மாநிலத்தலைவர் திரு. இர.மனோகரன்.M.A., D.L.L., அவர்கள் உடல் நலம் குறைவால் 5.8.2017 அன்று

நாமக்கல்லில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இறுதிச் சடங்கில் நமது சங்கத்தின் மாநிலத்தலைவர் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து 10.8.2017 அன்று சென்னையில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் நமது சங்கத்தின் பொதுச்செயலாளர் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினார்.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்.

கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள், மண்டலச்செயலாளர்கள், மற்றும் மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.

நகல் : செய்தி மடல்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
(கணக்கு பிரிவு)

அனுப்புநர்
வா.உமாமகேஸ்வரி, B.Com., ACMA.,
தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்/வருவாய்,
144, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

பெறுநர்
அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்,
மின்விநியோக வட்டங்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.

கடித எண்.தநிக அ/வரு/நிக அ/வரு/துநிக அ/வரு/க அ/வரு/கோ.உத்தரவுகள்/எண்.566/17, நாள் 02.08.17

ஐயா/அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் – அட்டைப்பட்டியல் பணித்தொகுப்பு – மத்திய அலுவலக கணக்கீட்டு அலுவலர்களின் கடமைகளும் பொறுப்புகளும் – மிக கவனமாகப் பின்பற்றுதல் – சம்பந்தமாக.

பார்வை:
1. (Per) FB/TANGEDCO Proceedings No.8, dt. 23.01.2014.
2. Lr.No.CFC/FC/R/AO/Rev/D /14, dt. 25.06.2014.
3. Lr.No.CFC/R/EA/D /2015, dt. 09.09.2015.
4. Lr.No.CFC/REV/FC/REV/AO/REV/F.Rev.Aug./D.508/17, dt. 12.07.2017.

= = = = =

பார்வை 1–ன்படி அட்டைப்பட்டியல் பணித் தொகுப்பில், மத்திய அலுவலக, கணக்கீட்டு அலுவலர்களின் கடமைகளும் பொறுப்புகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக பார்வை 2 முதல் 4 வரை உள்ள கடிதங்கள் வாயிலாக உத்தரவுகளும், வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும், தலைமை அலுவலகத்திற்கு வருகின்ற ஆய்வு அறிக்கைகளை சீராய்வு செய்யும் பொழுது வரையறுக்கப்பட்ட பணிகள் சரிவர செய்வதில் சில குறைபாடுகள் இருப்பதை அறிய நேரிடுகிறது.

எனவே, மேற்கண்ட பணிகளை கவனமாக கணக்கீட்டு அலுவலர்கள், மத்திய அலுவலகத்திலும், பிரிவு அலுவலகங்களிலும், மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள இடங்களிலும் மற்றும் பொதுவாக மேற்கொள்ள வேண்டிய கடமைகளும், பொறுப்புகளும், வாரியத்தில் வருவாய் இழப்பைத் தவிர்க்கவும், கூடுதல் வருவாய் ஈட்டவும் உதவியாக இருக்கும் வகையில் கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

## மத்திய அலுவலகத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

1. மின் கணக்கீடு மற்றும் வசூல் தொடர்பாக மின்நுகர்வோரிடமிருந்து வரும் குறைகள், புகார்கள், கடிதங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
2. மின்நுகர்வோர், உயர் அலுவலர்கள், பிரிவு அலுவலர்களுடன் கடிதத் தொடர்புகள் மேற்கொள்ளுதல்.
3. பிரிவு அலுவலகங்களில் கணக்கீட்டாளர்களைச் சுழற்சி கால முறையில் மாற்றம் செய்தலை கண்காணித்து அந்த விவரத்தை மேற்பார்வை பொறியாளருக்கு தெரியப்படுத்துதல்.

4. அரசு மற்றும் உள்ளாட்சி மின் இணைப்புகள் தவிர, பணம் செலுத்தத் தவறிய இதர மின் இணைப்புகளை கவனித்து மின்துண்டிப்பை உறுதி செய்தல்.

5. திரும்பிய காசோலைக்கான தொகை அபராதத்துடன் வசூல் செய்வதை உறுதி செய்தல்.

6. மின் கணக்கீடு மற்றும் பண வசூல், கணினியில் சரியாகப் பதிவாகியுள்ளதை சரிபார்த்தல்.

7. மின் கணக்கீட்டில் கண்டுபிடிக்கப்பட்ட குறைவான தொகையினை அடுத்த மாத கணக்கீட்டில் சேர்த்து வசூல் செய்ய ஏற்பாடு செய்தல்.

<u>பிரிவு அலுவலகத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள்</u>

1. வசூலிக்கப்பட்ட பணம் முறைப்படி வங்கியில் செலுத்தப்பட்டுள்ளதை வங்கி சான்றுச்சீட்டுடன் சரிபார்த்தல்.
2. மீதமுள்ள பணம் பத்திரபடுத்துவதை உறுதி செய்தல்.
3. பழுதான மின்மானி விபரங்கள் எழுதப்பட்டிருக்கும் பதிவேட்டினை சரிபார்த்தல்.
4. பழுதான மின்மானி உடனடியாக மாற்றப்படுவதை உறுதி செய்தல்.
5. வங்கியில் பணம் செலுத்திய சான்றுச் சீட்டு **(Chalan)** மற்றும் வசூல் ஆவணங்கள் வருவாய்ப்பிரிவுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படுவதை உறுதி செய்தல்.
6. **L.T.C.T.** மின் இணைப்புகளில் வீதப்பட்டி **(Tariff)**, பெருக்கும் காரணி **(M.F/P.F)**, இழப்புக் கட்டணம் **(Compensation Charges)** முதலியவை சரியாக விதிக்கப்படுவதை உறுதி செய்தல்.

<u>மின் இணைப்பு உள்ள இடம்</u>

1. தோராயமாக சில மின்இணைப்புகளில் மின்மானி, வெள்ளை அட்டை, கணினி ஆகியவைகளுடன் ஒப்பிட்டு மின்கணக்கீட்டை சரிபார்த்தல்.
2. மின் துண்டிப்பு செய்யப்பட்ட சில மின்இணைப்புகளில் சோதனை ஆய்வு மேற்கொண்டு இறுதி மின் அளவை **(FR)** சரிபார்த்தல்.
3. ஏதேனும் பழுதடைந்த மின்மானிகள் சிலவற்றில் கணக்கீட்டினை சோதனை ஆய்வு மேற்கொள்ளுதல்.
4. ஒரே முகவரியில் ஒரே பெயரில் வழங்கப்பட்டுள்ள மின் இணைப்புகள் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய வழிகாட்டுதலின்படி வழங்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்தல்.

<u>பொதுவானவை</u>

1. ஓராண்டிற்குள் வட்டத்திலுள்ள அனைத்து பிரிவு அலுவலகங்களிலும் ஆய்வு செய்யும் திட்டம் வகுத்து, அதில் குறைந்தபட்சம் மாதத்தில் 15 நாட்கள் பிரிவு அலுவலகம்/மின் இணைப்புள்ள இடங்களை ஆய்வு செய்ய வழிவகை செய்திட வேண்டும். இவைகளை உள்ளடக்கி மாதாமாதம் பயணத்திட்டம் தயாரித்து துணைநிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் ஒப்புதல் பெற வேண்டும். நகலினை மேற்பார்வை பொறியாளர் பரிசீலனைக்கு அனுப்பிட வேண்டும்.
2. ஒவ்வொரு மாத ஆய்வு அறிக்கையையும் அடுத்த மாதம் 5–ம் தேதிக்குள் மேற்பார்வை பொறியாளருக்கு சமர்ப்பித்திட வேண்டும்.

3. கணக்கீட்டு அலுவலர்கள் பணிகளை மேற்பார்வை பொறியாளர் அவ்வப்போது சீராய்வு செய்து நிர்வாகம் அறிவுறுத்தியுள்ள வகையில் பணியாற்றிட அறிவுறுத்திட வேண்டும்.

4. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினுடைய வருவாய் பெருக்கத்திற்கு மேலே கூறியிருக்கும் கடமைகளையும், பொறுப்புகளையும் எவ்வித குறையும் இன்றி கணக்கீட்டு அலுவலர்கள் செவ்வனே பின்பற்றிட வேண்டும் என்று மேற்பார்வை பொறியாளர்கள் அறிவுறுத்திட வேண்டும்.

(ஒம்/– 05.08.2017)
தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்/வருவாய்.

நகல்:
தலைமை பொறியாளர்கள்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:
இயக்குநர் (நிதி), இயக்குநர் (பகிர்மானம்).
மேற்பார்வை பொறியாளர்/மின் வாரியத்தலைவர் அலுவலகம்.